**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநரின் செயல்முறைகள்,**
**முன்னிலை : தண்.வசுந்தராதேவி, எம்.ஏ., எம்.எட்., எம்.ஃபில்.,**
**இயக்குநர்**

**ந.க.எண். 298646/H1/2018** **நாள் : 04.01.2019**

**பொருள் :** மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வு – மார்ச் 2018 +1 தேர்வுக்கு பின் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்றோர் – மாணாக்கர் மேல்நிலை முதலாமாண்டு பயின்ற பள்ளியின் வழியாகவே தேர்வெழுத அனுமதி வழங்குதல் – பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரைகள் வழங்குதல் – சார்பு.

**பார்வை :**

1. அரசாணை (நிலை) எண்.100, பள்ளிக் கல்வி (ஜிஇ1)த் துறை, நாள்.22.05.2017.
2. முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்பட்ட இவ்வலுவலக இதே எண்ணிட்ட கடிதம், நாள் 27.12.2018.

------

**ஆணை :**

பார்வை 1–ல் காணும் அரசாணையின்படி, மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதி தேர்ச்சிபெறாத தேர்வர்களை மேல்நிலை இரண்டாம் ஆண்டு பயில அனுமதிக்காமல் பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் வழங்கி அனுப்பியதாகத் தெரிவித்து, தங்களை தனித்தேர்வர்களாக மேல்நிலை முதலாம் ஆண்டு மற்றும் இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளை எழுத அனுமதிக்குமாறு கோரி பலர் இவ்வலுவலகத்தினை அணுகுகின்றனர்.

எனவே, பள்ளி மாணவராக மார்ச் 2018 மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வெழுதிய பின்னர், பள்ளியிலிருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று இடைநின்ற மாணாக்கரின் நலன்கருதி, நடைபெறவிருக்கும் மார்ச் 2019, மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினையும், மேல்நிலை முதலாம் ஆண்டு தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களுக்கான தேர்வுகளையும் தாங்கள் பயின்ற பள்ளியின் வாயிலாகவே எழுதுவதற்கு அனுமதி வழங்கி, பார்வை 2–ல் காணும் கடிதம் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்பட்டது.

மேற்காண் வகைத் தேர்வர்களை தங்கள் பள்ளி மாணவர்களுடன் தேர்வெழுத அனுமதித்தல் குறித்து அனைத்து மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கும் கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

1. தங்கள் பள்ளியில் மேல்நிலை முதலாமாண்டு (+1) பயின்று மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு (+1) பொதுத்தேர்வெழுதிய மாணாக்கரை பள்ளியிலிருந்து

...2

மாற்றுச்சான்றிதழ் பெற்று சென்ற காரணத்தால், **மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத்தேர்வுக்கான தங்கள் பள்ளி மாணாக்கரின் பெயர்ப்பட்டியலில் இருந்து நீக்கம் செய்திருந்தாலும், அவர்களது பெயரும் தங்கள் பள்ளி மாணாக்கரின் பெயர்ப் பட்டியலில் இடம் பெற்றிருக்கும்.** அவர்கள் தங்கள் பள்ளியில் பயிலும் மாணாக்கர்களுடனேயே பள்ளி மாணவராக மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினையும், மேல்நிலை முதலாமாண்டில் தோல்வியுற்ற பாடங்களுக்கான தேர்வுகளை மார்ச் 2019 மேல்நிலைத் முதலாமாண்டு பொதுத்தேர்வின் போதும் எழுதுவார்கள். அவர்கள் தேர்வெழுத இணையதளம் வழி தனியே விண்ணப்பிக்கத் தேவையில்லை.

2. எனினும், அம்மாணவர்கள் தற்போது தொழிற்பயிற்சி அல்லது பள்ளிக் கல்வி சாராத வேறு கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயின்று வருபவர்களாக இருப்பின், அவர்களும் பள்ளியின் வழி மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை எழுதுவதைத் தவிர்க்கும் பொருட்டு, தலைமையாசிரியர்கள் மேற்குறிப்பிட்ட தேர்வர்களுக்கு தங்கள் பள்ளியில் இருந்து வழங்கப்பட்ட +1 / +2 அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை தேர்வர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும்.

3. அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ் வைத்துள்ள தேர்வர்கள் அனைவரும், தங்கள் பள்ளி மாணவர்களுடன் மார்ச் 2019 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளை எழுத உள்ளனர் என்ற தகவலையும், அவர்கள் **07.01.2019 முதல் 11.01.2019 வரையிலான நாட்களில்** +1 / +2 அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழுடன் பள்ளிக்கு வந்து உரிய தேர்வுக்கட்டணத் செலுத்தினால் மட்டுமே தேர்வெழுத இயலும் என்ற தகவலையும், அவர்களுக்கு **பள்ளி தலைமையாசிரியர் 05.01.2019 தேதிக்குள் தெரிவிக்க வேண்டும்.**

**<u>மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வில் தோல்வியுற்ற பாடங்களை எழுதவுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் பெற்ற மாணவர்களை (நீக்கம் செய்யப்பட்டோர்) தேர்வெழுத அனுமதித்தல்</u>**

1. பள்ளித் தலைமையாசிரியர்கள் 04.01.2019 (இன்று) முதல் www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று, click here to access online Portal என்ற வாசகத்தினை click செய்து, அதன் பின் Higher Secondar First Year (+1) Arrear Candidates March 2019 – Fees List Download என்ற Link- ஐ Click செய்து, தங்களுக்கு அரசுத் தேர்வுகள் இயக்ககம் வழியாக வழங்கப்பட்ட User ID மற்றும் Password –ஐ பயன்படுத்தி மேல்நிலை முதலாமாண்டு தேர்வில்

...3...

தோல்வியுற்ற பாடங்களை எழுதுவதற்கு மாணாக்கரிடமிருந்து பெறவேண்டிய கட்டண விவரத்தினை பதிவிறக்கம் செய்ய வேண்டும். (அப்படிவத்தில் மாணாக்கரின் பெயர், பதிவெண், தேர்வெழுத வேண்டிய பாட எண்கள் (subject code) ,தேர்வுக் கட்டணம் உள்ளிட்ட விவரங்கள் இடம் பெற்றிருக்கும். மாணாக்கர் தேர்வெழுத வேண்டிய ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/– வீதமும் இதரக் கட்டணமாக ரூ.35/–ம் தேர்வுக்கட்டணமாக செலுத்த வேண்டும்).

2. பதிவிறக்கம் செய்யப்பட்ட படிவத்தில் குறிப்பிட்டுள்ள பள்ளி மாணவர்கள் மற்றும் நீக்கம் செய்யப்பட்டோர் ஆகிய இரு வகை மாணாக்கரிடமிருந்தும், மேல்நிலை முதலாம் ஆண்டுத் தேர்வில் தோல்வியுற்ற பாடங்களை மீண்டும் எழுதுவதற்கு, படிவத்தில் குறிப்பிட்டுள்ள தேர்வுக் கட்டணத்தினை கண்டிப்பாக பெற வேண்டும்.

3. தேர்வுக் கட்டணம் செலுத்தாத மாணாக்கரது பெயரினை படிவத்தில் சிவப்பு மையினால் சுழிக்கவேண்டும்.

**<u>படித்த பள்ளியில் / பள்ளிகளில் இருந்து மாற்றுச் சான்றிதழ் பெற்று வேறு எங்கும் சேர்ந்து பயிலாமல் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வினை (முதன்முறையாக) எழுதவுள்ள மாணவர்களை தேர்வெழுத அனுமதித்தல்</u>**

**1.** மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வினை எழுத விரும்பும் மாற்றுச் சான்றிதழ் பெற்றுச் சென்ற மாணாக்கரிடமிருந்து கண்டிப்பாக தங்கள் பள்ளியில் வழங்கப்பட்ட **அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழை** பெற்றுக் கொள்ளவேண்டும்.

**2.**இம்மாணவர்களுள், தேர்வுக் கட்டண விலக்கு இல்லாதவர்களிடம் மட்டும் மார்ச் 2018 மேல்நிலை முதலாமாண்டு பொதுத்தேர்வின்போது பெறப்பட்ட அதே கட்டணத்தினை, மார்ச் 2019 மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வெழுதுவதற்கும் தேர்வுக்கட்டணமாகப் பெறவேண்டும். அத்தேர்வுக் கட்டணத்தினை தங்கள் பள்ளியில் தற்போது மேல்நிலை இரண்டாமாண்டு பயிலும் மாணவர்களிடமிருந்து பெறும் தேர்வுக்கட்டணத்துடன் சேர்த்து செலுத்த வேண்டும். அது (Mode of Payment) குறித்த விவரம் பின்னர் தெரிவிக்கப்படும்.

**3.**மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வினை எழுதுவதற்கு அசல் மாற்றுச் சான்றிதழைத் திருப்பிக் கொடுத்த மாணாக்கரின் விவரங்களை மட்டும் (நிரந்தரப் பதிவெண், பெயர், அசல் மாற்றுச் சான்றிதழ் எண்& நாள் உள்ளிட்ட விவரங்களை) இத்துடன் இணைத்தனுப்பப்படும் படிவத்தில் பூர்த்தி செய்யவேண்டும்.

..4..

மேலும், மேற்குறிப்பிட்ட மாணவர்களிடமிருந்து பெறப்பட்ட அசல் மதிப்பெண் சான்றிதழ், தேர்வுக்கட்டணம் உள்ளிட்ட கீழ்க்காணும் ஆவணங்களை, தனித்தனி கட்டுக்களாக (+1 / +2) தங்கள் மாவட்டத்திலுள்ள அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் **21.01.2019 அன்று** ஒப்படைக்க வேண்டும். ஒப்படைக்கப்பட்ட படிவங்களின் நகலினை பள்ளித் தலைமையாசிரியர் வைத்திருக்க வேண்டும்.

**மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**

1. இணையதளம் வழியாக பதிவிறக்கம் செய்யப்பட்ட படிவம்.
2. தேர்வர்களிடமிருந்து பெறப்பட்ட தேர்வுக்கட்டணம்.

**மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வு தொடர்பாக மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டிய ஆவணங்கள்**

1. மேல்நிலை இரண்டாம் ஆண்டுத் தேர்வினை எழுதுவதற்கு அசல் மாற்றுச் சான்றிதழை திருப்பிக் கொடுத்த மாணாக்கரின் விவரங்கள் பூர்த்தி செய்யப்பட்ட படிவம்
2. மாணாக்கரிடமிருந்து பெற்ற அசல் பள்ளி மாற்றுச் சான்றிதழ்கள்

தங்கள் பள்ளி மாணாக்கருடனேயே இம்மாணாக்கருக்கும் செய்முறைத் தேர்வினை நடத்த வேண்டும். செய்முறைத் தேர்வு நடத்தப்படும் தேதி குறித்த விவரத்தினை முன்கூட்டியே இம்மாணாக்கருக்கு பள்ளித் தலைமையாசிரியர் தெரிவிக்க வேண்டும்.

மேற்குறிப்பிட்ட அறிவுரைகளைப் பின்பற்றி மாணாக்கரை தேர்வெழுத அனுமதிக்காமல், அவர்களை அங்குமிங்கும் அலைக்கழிப்பதாக இவ்வலுவலகத்தில் புகார் பெறப்படின், சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமையாசிரியர்கள் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**இணைப்பு:** படிவம்.

ஒம்/–
**இயக்குநர்**

**பெறுநர்**
அனைத்து மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர்கள்
(முதன்மைக்கல்வி அலுவலர் வழியாக)

**நகல்**
1. அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்
2. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
3. அனைத்து மாவட்டக்கல்வி அலுவலர்கள்

} தகவலுக்காகவும் தக்க நடவடிக்கைக்காகவும்

**HSE SECOND YEAR EXAMINATION MARCH 2019**

**(FOR DELETED CANDIDATES)**

**EDU DISTRICT NO. & NAME:** **SCHOOL NO.&NAME:**

| SL NO. | CANDIDATE'S NAME | +1 PERMANENT REG.NO. | GROUP CODE | SCHOOL TRANSFER CERTIFICATE NO. & DATE | CANDIDATE'S SIGNATURE | REMARKS |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |

**SIGNATURE OF HEAD MASTER / PRINCIPAL**

**with School Seal**